மகாத்மா காந்தியார் சரித்திரம்

தலைப்புச் சீட்டு

உ

ஓம் தத் ஸத்

வந்தே மாதரம்! அல்லாஹு அக்பர்!



கலியுக

அவதார புருஷராகிய

மகாத்மா காந்தியின்

சரித்திரத்

திருப்புகழ்ச்சிந்து.

முதற்பாகம்

இது

வடிவூர் இராம—சடகோபனால்

இயற்றப்பெற்று

திருக்கோவலூர்

P. வேணுகோபால முதலியாரால்

தமது

ஸ்ரீநாராயண விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

...ப்பெற்றது.] 1923 [விலை அணா 2.

உ

ஓம் தத் ஸத்

வந்தே மாதரம்! அல்லாஹூ அக்பர்!

கலியுக

அவதார புருஷராகிய

மகாத்மா காந்தியின்

சரித்திரத்

திருப்புகழ்ச்சிந்து.

முதற்பாகம்

இது

வடுவூர் இராம—சடகோபனால்

இயற்றப்பெற்று

திருக்கோவலூர்

P. வேணுகோபால முதலியாரவர்களால்

தமது

ஸ்ரீநாராயண விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

 1923 [விலை அணா 2.

உ

காந்தியாய நம:

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— தஞ்சாவூர் ஜில்லா, வடுவூர், இராம—சடகோபன் அவர்கள் எழுதின "மகாத்மா காந்தி சரித்திரத் திருப்புகழ்க் காவடிச்சிந்தின்" முதற்பாக புத்தகத்தை ஷையார் எனக்குச் சகல சுதந்தரத்துடன் கொடுத்துவிட்டபடியால் இதை என் அனுமதியில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென, சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் செய்திருக்கிறது.

இப்படிக்கு,

P. வேணுகோபால முதலியார்.

ஓம்

பதிப்பாசிரியர் முகவுரை.

மகாத்மா மோகன தாஸ் கர்ம் சந்து காந்தியடிகளின் புகழொளி உலக மெங்கும் பரவியிருக்கிறது.

பெரியோரை வணங்குவதில் முதன்மை பெற்ற தமிழ் நாடும் அன்னாரை மிகவும் போற்றி வருகிறது.

அவரது சரித்திரம் பலவாறாக வெளிவந்திருப்பினும் பண்டிதரும் பாமரரும் உருகும்படியான திருப்புகழ்க் காவடிச்சிந்து சந்தங்களில் அமைக்கப்பெற்றிருக்கிற இந்த நூல் சந்துகளிலும் குக்கிராமங்களிலும் நுழைந்து எழுத்து வாசனை யறியாதார் உள்ளத்திலும் அதி மேன்மையான அவரது குணங்களையும், முறைகளையும் நிலை பெறச் செய்யு மென்பது எனது திண்ணமான அபிப்ராயம்.

இதன் ஆசிரியரின் வல்லமையைச் சோதிக்கத் தங்கள் முன்நூல் இருப்பதால் அதைப்பற்றி யான் அதிகம் கூறத்தேவையில்லை. அவரது நூல்கள் ஆதரிக்கத்தக்கன என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பாரதியாரின் அபூர்வ வல்லமையை அவரது ஆயுள்காலம் வரை அதிகமாகக் கவனியாது விடுத்து அவர் மறைந்த பின்னரே புகழ்ந்து வருந் தும் தமிழ் நாடு தாய் பாஷை விஷயமாய்க் கண்விழித்துக்கொண்டதென் றும் இனி இத்தகையோரை நன்கு மதிக்குமென்றும் நம்புகிறேன்.

மேற்சொன்ன இரு நம்பிக்கைகளின் பேரிலேயே இந்த நூலை அச்சிட்டு வெளிப்படுத்தத் துணிந்தேன்.

இதன் மற்ற பாகங்களையும் இவ்வாசிரியரின் ஏனைய நூல்களையும் வெளிப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். தமிழ்நாடு என் அபிப்ராயத்தை ஆதரிக்குமென்று நம்புகின்றனன்.

தமிழன்.

முகவுரை.

'வாக்கால் மாநுடம் பாடவும் அல்லோம்' என்ற பெரியாரின் திருவாக்கை உறுதியாகப் பின்பற்றுவது நம் திடமான கொள்கை.

மகாத்மாவின் சரித்திரத்தைப் பாடப்புகுந்ததும் அவர் தெய்வத்தின் அவதாரம் என்ற நம்பிக்கையினாலேயாம்.

'அப்படியானால் அவரிடத்து தெய்வ சம்பத்தில்லையே அதாவது சித்துகளில்லையே' என்ற கேள்வி பிறக்கலாம்.

அவ்வாறு சித்து விளையாட்டில் ஈடுபடாததாலேயே இந்த மகாத்மாவின் அவதாரத்தை எல்லா அவதாரங்களையும்விட மேலானதாகக்கருதுகிறோம்.

ஏனைய அவதார புருஷர் சித்தால் உலகத்தை மயக்கி நடத்தினர்.

மகாத்மாவோ, கலப்பற்ற ஒப்பற்ற ஆத்மாவால், உண்மையால், தருமத்தால், நீதியால், சாந்தத்தால், அடக்கத்தால், எளிமையால், ஊழியத்தால், எங்குஞ் சூழும் இரவியின் காந்தியைப்போல் யாவர் மனத்தையுங் கவர்ந்து கொண்டனர்.

இதனால் ஏனைய அவதார புருஷர்களைக் குறைத்துக் கூறுவதாக எண்ணிவிடாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

'பராபரமாய் வாழ்ந்திட்டாலும் சித்தாடாதே' என்று சித்தர்களுக்கெல்லாம் மேலான 'ஞானக்குரவன்' என்று பெயர் பெற்ற, ஸ்ரீசுப்பிரமணியர் தமது ஞானம் (நூ) ல் வெளியிட்டிருக்கிறார்கள்

'முனிவர் சித்திகள் விநோத மாத்திரம் முத்தியைத் தாராவே' என்றார் கைவல்யக்காரர்.

இவற்றால் மகாத்மாவின் அவதாரப் பெருமையையே விளக்கத் துணிந்தனம்.

தவிர ஏனைய அவதார புருஷர் ரஜோ குணத்தினால் உலகை நடத்தினதாகச் சரித்திரம் கூறுகிறது. மகாத்மாவோ சத்துவ குணத்தால் நடத்துவது நிதர்சனமாயிருக்கிறது.

நடக்குந் தெய்வத்தைக் கண்டும் கேட்டும் அவாது முறைப்படி நடந்தும் அந்தர்முகம் பகிர்முகம் இரண்டிலும் விடுதலை யடைந்தும் இந்த அவதாரகாலத்தில் கிடைத்திருக்கும் நமது பிறவிப்பயனை எய்தத் தூண்டுவதே இந்த நூலின் கருத்தாகும்.

முதற்பாகம் அவரது தென்னாப்பிரிகா அநுபவம் முற்றிலும் கொண்டது. மறுபாகத்தில் பின்னைய சரித்திரம் தொடரும்.

பிழைகளை மன்னித்து எடுத்துக்காட்டி உதவுமாறு தெளிந்தோரை வேண்டும்

அடிமை,

இராம—சடகோபன்.

ஓம்.

மூலப்பொருள் காப்பு.

வெண்பா.

தித்திக்குஞ் செந்தமிழிற் சிந்துபுகழ்க் கந்திரடை
பத்திக்குஞ் சித்திக்கும் பாடிடவே—முத்திக்கும்
வித்தான மோன விநாயனுகா மூலத்தின்
கர்த்தாவின் காலிணையே காப்பு.

இஷ்ட தெய்வ வணக்கம்.

வெண்பா.

மாமனடி யென்மதியிற் காமனடி மன்னுபரந்
தாமனடி தற்பதகற் சாமனடி—சோமனடி
வந்திக்கும் வாணுதலாய்! மார்பணைத்துப் பூவணையிற்
சந்திக்க முந்தியது தான்.

ஆத்ம குரு வணக்கம்.

வெண்பா.

அஞ்ஞானச் சேற்றினிடை ஆழ்த்திருந்த நாயேனைத்
தன்ஞானங் கொண்டு தனியாக்கி—மெஞ்ஞான
வாரிதியில் மூழ்க்கியவெம் மாமுனிவன் நாமமெழில்
சேர்ரமண ராகுமெனச் செப்பு.

க—வது அங்கம்.

தொடக்கம்.

இன்ப வீடளிக்கும் பூவுலகில் கலியின் கொடுமையால் தருமம் குறைந்தது. அதருமம் வளர்ந்தது. சாதுக்கள் தளர்ச்சியை நீக்கும்படி தேவர்கள் பகவானிடம் முறையிடுகின்றனர்.

'ஆறுமுகவடி வேலவனே' என்ற காவடிச்சிந்து மெட்டு.

1 அஞ்சன வண்ணனே தஞ்சமுன் பாதமெம்
மாகுலம் தீரு மய்யா- உன்ம
அன்றியும் ஓர் துணை யுண்டுகொல் லெங்களுக்
கபயம்நீர் தாரு மய்யா

2 வஞ்சம் பொய் சூதுகள் மிஞ்சியே வாடுறார்
மாநில மக்க ளெல்லாம்- உயர்
மாயவனேதிரு பாகா நாரண
நாவில் சொல்ல வெல்லாம்

3 பஞ்சம் பிணிமுதல் பாரெங்குஞ் சூழுது
பாதகம் மீறு தய்யா. பல
பஞ்சைகளோகுலைக் கஞ்சியு மின்றியே
பதறிமெய் சோரு தய்யா

4 நெஞ்சிலிரக்கமும் நீதியிலாக்கொடுங்
கோன்மை நிலை யாச்சே நிலை
நித்தமும் பக்தி செய் யுத்தமர் சித்தமும்
நோதல் தலையாச்சே.

பகவான் தன் பக்தர்களுக்கு 'என்ன நேரிட்டதென்று' திடுக்கிட்டு விசாரித்து அபயம் அளித்தல்.

ஷை சிந்து மெட்டு.

1 அப்படியா! ஆ! என் னருயிரன்பர்கள்
வாடப்பொறுப் பேனு நீர்
அஞ்சேல்! அஞ்சேலினி அசுரர்குலங்கள்
அடங்கத்தறிப்பேன் நான்

இதைக்கேட்ட தேவர்கள் மனந்தெளிந்து பகவானிடம் மற்ற அக்கிரமங்களையும் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறார்கள்.

ஷை சிந்து மெட்டு.

1 மெய்யே! எம் நாதனே! மேதினிதன்னிலே
மெய்மை குறை வாச்சே என்றும்
மெய்மை பொறை நெறி மேலெனச் செப்பிய
துய்ய நெறி போச்சே.

2 கண்டதே காக்ஷியென் றண்டுடுக்குங்குடி
காரர்கை மேலாச்சே யிளங்
கன்னியர் பால் பெறுங் கண்ணியம் நீரெனக்
கைதொழுக லாச்சே

3 நாணம் மடம் விட்டு நாரியரெங்கணும்
நாயகர் தேடுறாரே பல
நாயகர் கைதொட்டு வாயினில் மண்ணிட்டு
நாடெங்கும் நீடுறாரே.

பகவான் உலக அநீதிகள் ஒழியும்படியாக கோடி சூரிய காந்தி வீசும் சக்கரத்தை மகாத்மா காந்தியாக அனுப்புவதாக வாக்களித்தல்.

'இலைசந்த ஏறும் கரியுரி போர்வையும்' என்ற திருப்புகழ்ச் சந்தம்.

1 புகழ்ந்து ஞானம் பொலிவுற வேவரு புல வீரே!
புனைந்து வாலகை நிலைபெற வேயருள் பெறவீரே

2 அகந்தை மாயும் படியெம தாகம நெறிமேவி
அணிந்து யோகம் பயிலெம தாருயிர் நிலைபோரை

3 இகந்த பாசப் பசுடிக ளேதம துயிர்மேலே
இழந்த தாலிங் கெமதருள் ஞாலம தறியாதோ

4 புகுந்த சோரம் பொடிபட வேயென தருள் நேமி
பொலிந்து லோகம் புனிதம தாவது மதிவீரே.

உ-வது அங்கம்.

மகாத்மா சீமைக்குப்போய் பாரிஸ்டர் (வக்கீல்) பரிஷையில் தேறி வரும்படி அனுமதிக்க வேண்டுமென்று தாயாரை வேண்டுகிறார்.

'அள்ளி அள்ளிக் குடிக்கும்' என்ற மெட்டு.

1 சீமைப் பரிஷைபினிற் றேறிவரும்படி
சென்று வருகிறேனம்மா! என்னம்மம்மா!
சென்று வருகிறேனம்மா!
செந்திரு தங்கிய சுந்தர மங்கல
சிங்க மிலங்கிய துங்கநல் லங்கில சீமை

மகாத்மாவின் தாயார் சீமையிலுள்ள தீமைகளை எடுத்துக்காட்டிப் பிரயாணத்தைத் தடுப்பது.

ஷை மெட்டு.

1 தீமை பலவுங்கிசழ் சீமையின் நாமமே
சிந்தையி லெண்ணலாகுமா? வினை போகுமா?
சிந்தையி லெண்ண லாகுமா?
ஜென்ம கலைந்தவிர் சன்ம பழுந்திநல்
தன்ம மிழந்திடர் துன்னிய அன்னிய தீமை

மகாத்மா தான் ஒழுங்காக நடப்பதாகவும் பகவத் பக்தி செய்வதாகவும் அநீதத்தை நாடாதிருப்பதாகவும் வாக்குத்தருதல்.

ஷை மெட்டு.

2 நாமுந் தினந்துதி நாரணன் நாமமே
கானம் புரிகிறேனம்மா! என்னம்மம்மா!
கானம் புரிகிறேனம்மா!
ஞாய நூர்ந்தா ஞானவரந்தரு
நாடு படர்ந்தொரு கேடு தொடர்ந்திலன் சீமை

துராசார ஸ்திரீகளும் மது மாமிச வர்க்கங்களுமே நிறைந்த சீமையில் புத்திரன் கெட்டுவிடுவான் என்றஞ்சித்தாயார் மறுபடியுந் தடுப்பது.

ஷை மெட்டு.

2 காம வகை முதல் சாராய மாமிசம்
கண்டு மயங்கலாகுமே என்னப்பநீ
உண்டு தியங்கலாகுமே
கண்ணிய மாகுநம் புண்ணிய வாழ்வினி
மண்ணினில் தாழ்வுறக் கண்ணுறில் வாழ்கிலன் சீமை

மகாத்மா துராசார ஸ்திரீகளைக் கூடுவதில்லை யென்றும் மது பானம் அருந்துவதில்லை யென்றும் மாமிசம் புசிப்பதில்லையென்றும் சத்தியம் செய்து கொடுத்துத்தாயாரிடம் அநுமதி பெறுதல்.

ஷை மெட்டு.

3 தீமகிழ்ந் தோதிய நேமமென் னுவியே
நிற்குமளவுமே யம்மா! என் சத்தியம்!
நிற்கு மழுவதேனம்மா! நின்
நெஞ்சு கலங்குவ தஞ்சுவன் வஞ்சமில்
தஞ்சம் நின்னன்பினில் கொஞ்சம் அருள்புரி சீமை.

௩-வது அங்கம்.

ஞாயதுரந்தர னுருப்படி சீமைக்குச் சென்ற மகாத்மாவை சிலர் காமதுரந்தரனாகும்படி தூண்டுதல்

'ஸ்ரீராமச்சந்திரனே' என்ற மெட்டு.

1 இந்த—தேசத் துரை மகளிர்
ஆசைக் கலவிதரு
சீதக் கலபமயில் பார் பார் பார்
பாருமே உடை மாறுமே (தேச)

அயல் மாதரை இச்சித்தல் மகா பாதகம். அதற்குத்தான் உட்பட முடியாதென்று மகாத்மா மறுத்தல்.

ஷை மெட்டு.

2 துயர்—மாறுப் பிறவியினில்
தீராப் பழி செய் மறு
யாதர் முகத்தை யிவன் பாரேனே
பாதகம் இழி பாதகம் (மாறு)

சீமையில் மாமிச வகை உட்கொள்ளும்படி மகாத்மாவை வற்புறுத்தல்.

ஷை மெட்டு.

3 நம்—நாவிற் கினிய சுவை
பாகம் புரிந்த பசு
நாவைப் புசித்துப்பசி தீர் தீர் தீர்
தீருவாய் வலி யேறுவாய் (நாவி)

இதைக் கேட்ட மகாத்மா சிந்தை துடித்து மறுத்தல்.

ஷை மெட்டு.

4 ஐயோ!—சிந்தை துடிக்குதென
தங்கம் பதைக்குதய்யோ
தெய்வப் பசுவருந்த லா மோ தான்
தீவினை பிது தீவினை (சிந்தை)

சீமைச்சாராயம் உற்சாகம் தருவதென்று அதனை உட்கொள்ளும் படி மகாத்மாவை வேண்டுதல்.

ஷை மெட்டு.

5 ஜய—வீரந்த தும்பிடுசா
ராயம் அருந்திடின் நின்
மேனிசெழித்திடுமென் மேல் மேல் மேல்
வீசுமே புகழ் வாசமே (வீரந்)

புத்தியைப் பேதலிக்கச் செய்யும் சாராயம் அவமானத்தை விளைவிக்கு மென்று மகாத்மா தடுத்தல்

ஷை மெட்டு.

6 படு—மாயத்தனை செய் மது
பான மருந்தி வுயர்
மான மிழந்திடுவர் காண் காண் காண்
காணுமே மனம் நாணுமே (மாயத்)

மகாத்மாவின் பிடிவாதத்தைக்கண்ட அவரது நண்பர் கனவான்களின் பந்தியில் இவரைக்கொண்டுபோய் சரிப்படுத்த எண்ணி அங்ஙனமே வற்புறுத்துகிறுர். அங்கும் மறுக்க அவமானப்படுத்தி வெளியே துறத்துகிறுர்.

ஷை மெட்டு.

7 உயர்—நேசர்தம் பந்தி விசு
வாசம் புரிய கில்லா
நீசனே நீ வெளியில் போ போ போ
போதுமே நின் வாதமே.

மகாத்மா வெளியே போவதேமேலென்று புறப்பட்டுப்போகிறார்.

ஷை மெட்டு.

8 என்—'மானமிழந்து முயிர்
வாழாமை முன்னினிது'
மாதாவின் வாக்கியமே-நேர்-நேர்-நேர்
நேரதால் வெளி யேகுவேன்.

சீமையில் ஒரு ஆங்கிலேய பாதிரியார் இயேசு நாதரின் வாக்கியங்களைப் படித்து இகபர சித்திகள் அடையும்படி மகாத்மாவை ஏவுதல்.

ஷை மெட்டு.

9 எங்கள் கர்த்தரேசு வாக்கியத்தை
நித்தம் பயின்றிடவே
கண்மணியே யென்மகனே வா வா வா
வானமுந் தரும் ஞானமே.

தனது சொந்த மத நூல்களை ஆராய்ச்சி செய்யுமுன்னர் மற்ற மத கிரந்தங்களைப் பார்க்க முடியாதென்று மகாத்மா மறுத்தல்.

ஷை மெட்டு.

10 என்—சொந்தமத நூல்களையே
சிந்தை யுற வோது முனர்
சொற்படி நான் செய்வதரி- தாம் ஆம் ஆம்
ஆகுமே மனம் நோகுமே. (சொந்த)

௩-வது அங்கம்.

மகாத்மா சீமையிலிருந்து திரும்பிவிட்டார். அவரது சொந்த ஊராகிய போரிபந்தர் வியாபாரிகளுக்கு தென்னாப்பிரிகாவில் கடைகளுண்டு. அவை சம்பந்தமான வியாஜ்யங்களை நடத்துவதற்காக தென்னாப்பிரிகாவிற்குப்போய் வரும்படி அவர்கள் மகாத்மாவை வேண்டுகிறார்கள்.

'பாளைவாய் கமுகில் வந்து வாளைபாய்' என்ற சிந்து மேட்டு.

1 பாரதா விற்சிறந்த போரிபந்த ரிற்பிறந்த
பாலராகிய மோகனே தாஸரே—எம்மைப்
'பாலனம் புரியவந்த' நேசரே

2 சீரதாம்தென் னாப்ரிகாவில் பேர்பெறும்பிரிட் டோரியாவில்
சேர்ந்தபல வ்யாஜ்ஜியங்கள் தீரவே—நீர்
சென்றுவாரு மெங்கள்குறை மாறவே.

தன்னுடைய தேசத்தாருக்குக் கூடிய வரை உதவி செய்யவே தான் கற்றுவந்ததாகவும் ஆதலால் தென்னாப்ரிகாவுக்கு அவசியம் போவதாகவும் மகாத்மா ஒப்புக்கொள்ளுகிறார்.

ஷை மேட்டு.

1 நான்பிறந்த நாடுகந்த ஞாயமே பெறுவதற்கே
யான் பயின்று வந்ததென்று தேறுமே—எந்த
நாளுமே துயரகத்தி லாறுமே.

2 ஆதலால்தென் னாப்ரிகாவில் வாதெலாம கற்றிடவோ
ராண்டிருந்து ஈண்டுறைவன் பாருமே—உம்
ஆகுலங்கள் தீருமில்லஞ் சேருமே.

௫-வது அங்கம்.

தென்னாப்ரிகாவில் ஒரு வருஷம் தங்கியிருந்து மகாத்மா வியாஜ்யங்களைத் தீர்த்தார். அவரைத் திருப்பி இந்தியாவிற்கு அனுப்புவதற்காக ஒரு விருந்து நடந்தது. இந்தியரின் சுதந்தரத்தைக் குறைக்க அங்கு மசோதா கொண்டு வருவதாக அன்று பத்திரிகைகளில் கண்ட மகாத்மா நிலையை ஆங்குள்ளோருக்கு விளக்கிக் காட்டுகிறார்.

'செந்தின்மா நக ரந்தனில் மேவிய' என்ற சிந்து மேட்டு.

1 இந்தமா நக ரந்தனில் மேவிய
இந்தியரே நம தாண்மை தனைப்
பந்திக்கவே பெரும் பான்மை ஜன
மிங்கெழுந்துமு முங்குமாதலின்
எங்கணுந்திட முங்கொளாவிடின்
எந்த வேளையும் சிந்தை கலங்கிநாம்
எய்த்திடவும் விதி யாகும் உயிர்
வைத்திடவும் மனம் நோகும்.

2 சொந்தமானசு தந்தரந் தன்னையே
சோதிக்கவே யிடங் கண்டார் நம்மை
வாதிக்க வேதிடங் கொண்டார் இங்கு
சூழு மிந்தியர் யாவரும் பணி

சூழினல்லது வாழ்விழந்திழி
துன்ப சாகரம் மூழ்கிடவே யொரு
தொந்தமமைந்திடும் பாரும் இந்தப்
பந்தமொழிந்திடச் சேரும்.

இதைக் கேட்ட இந்தியர் திடுக்கிட்டுத் தாங்கள் மகாத்மாவின் ஆணைப்படி நடப்பதாகவும் வாக்குறுதி செய்து மகாத்மாவை, அங்கேயே தங்கித், தங்களுக்கு வழி காட்டும்படி, வேண்டுகிறார்கள்.

ஷை மேட்டு.

1 நங்கள் வாழ்துணை யாகவந் துற்றிடு
நாயக ரேயெமை வேண்டி இந்த
நாட்டினி லேவந்து தோன்றி பல
ஞாய வாதங்க ளேபுரிந்திடு
ஞான வானும தாணையின்படி
நம்புமேபணி செய்திடு வோஞ்சில
நாளிருந் தெங்களைக் காரும் உந்தன்
தாள்பணிந் தோம்முகம் பாரும்.

அவர்களுக்கு உதவி செய்வதே தனது கடமை யாதலால் தான் அங்கு தங்குவதாக மகாத்மா ஒத்துக்கொள்ளுகிறார்.

ஷை மேட்டு.

2 திங்கண் மாமுகச் சேயிழை பாரத
தேவியின் சேயர் நா மன்றோ என்
ஆவியும் பாலுள தன்றோ எந்த
தேயமேகினும் வாயிலாதவென்
ஆயிபாலர்கள் தூய பாதமே
தெண்டனிட்டுடன் தொண்டு புரிந்திடக்
கொண்டவனென்கட னாகும் நீர்
ஒன்று பட்டால் திட மாகும்.

தென்னாப்பிரிகாவில் இந்தியரின் சுதந்தரத்தைக் குறைக்க ஏற்பட்ட சட்டத்தை இராஜ சம்மதம் பெறவொட்டாமல் தடுக்கும்படி மகாத்மா பதினாயிரம் கையெழுத்துகளடங்கிய ஒரு மகஜரை இங்கிலாந்துக்கு அனுப்புகிறார். ஏனெனில் தென்னாப்ரிகா அரசாங்கத்தார் மகாத்மாவின் முயற்சியின் பலனாக சட்டத்தில் சில மாறுதல்கள் செய்தார்களே தவிர சட்டம் செய்யாமல் நிறுத்தவில்லை.

நேரிசை ஆசிரியப்பா.

ஓங்கிய செல்வம் உண்மையும் வீரம்
நீங்கரும் நீதி நின்றிடும் நாடு

ஆங்கில மென்றே அறைகுவ ராங்கே
தாங்கிய செங்கோல் தலைமே ளாது
ஏழைக ளேனும் இருநிதி கொண்டு
வாழ்குந ரேனும் வழக்கினி லொன்றாய்க்
கணித்திடு மறமே! காவலர் மணியே!
அணித்திடு மெங்கள் அபயம்! அபயம்!!
நீரும் நிலனும் நிறைந்த பொலிவால்
சீரோர் புகழும் தென்னாப் ரிக்கா
நாட்டினில் வெள்ளை நாக ரீகர்
கேட்டினி லெங்கள் கேண்மை வேண்டி
மூவே ராண்டு முடிந்த பின்னர்
யாவரு மொன்றாய் இனிது வாழ்கப்
போலி வார்த்தை புகன்று மேனாள்
கூலிகள் வேண்டிக் கூவின ரன்றே
இரப்போர்க் கென்று மில்லை யென்னாச்
சிறப்புடை யெங்கள் தேயத் துள்ளோர்
நற்குடிப் பிறந்தார் நாரியர் பலரும்
பற்பல வகையான் பாவின ராங்கே
காடு திருத்திக் கவினெலா மெய்த
நாடு செழிப்ப நலம்பல செய்து
செல்வம் பொங்கச் சிறப்பு மல்க
நல்கின ரந்த நன்றி காணா
தோட்டிட வெம்மை யுடன்படு மாந்தர்
காட்டிடு கொடுமை கணித்தற் கொன்றோ
சொந்தப் பொருளாம் சுதந்தர மதனை
பந்தஞ் செய்யப் பற்பல சட்டம்
இயற்றி நின்றார் எனென் பாரில்
மயக்குறு கின்ற மற்றவ ரின்றே
வாக்குக ளில்லா வகைசெய் வித்தே
தாக்கு மெம்மைச் சார்வா ரில்லை
நீதி தந்து நின்னுடைக் கொடியின்
க்யாதி தன்னைக் காத்திடு மென்றே
பாரதி தந்த பைந்தமிழ்
பாரு மொப்பம் பதினா யிரமே.

௧௦-வது அங்கம்.

மகஜரின் பயனாக சட்டம் இராஜ சம்மதம் பெறவில்லை. ஆனால் வேறு சட்டங்களால் இந்தியரின் சுதந்தரம் குறைக்கப்பட்டது. சிறிது வெற்றியைக்கண்ட இந்தியர் மகாத்மாவை அங்கு தங்கும்படி வற்புறுத்தினர். மகாத்மா தன்னைத் தென்னாப்ரிகாவில் வக்கீலாகப் பதிவு செய்து

கொண்டு குடும்பத்தை அழைத்துச்செல்ல இந்தியாவுக்குத் திரும்பினுர். அச்சமயம் தென்னுப்ரிகா இந்தியரின் நிலைமையை இந்தியாவெங்கும் எடுத்துச்சொல்லுகிறுர்.

'மார்கழி மாதம் திருவாதிரை நாள்' என்ற மெட்டு.

1 பார்புகழ் பாரத சோதரரே யுங்கள்
பாதம் பணிந்தே னய்யே—உங்கள்
பாலகரேவெளி நாடுகளில்படும் பாடுகள் கேளுமய்யே

2 பசப்பிக்கங் காணிகள் பாலரைக் கொண்டலோ
பறக்கிறுர் கப்பலிலே—அவர்
பரிபவங் கண்டுள்ளம் உருகுதே ஐயய்யோ
பரிதாபம் பாருமய்யே (பார்)

3 இந்திய ரென்றுலே ஈனப்படுத்துறுர்
எங்க ணும் வெள்ளையரே—அங்கு
இம்மை மறுமைகளை யிழந்துநம் மக்களோ
எய்த்துத் தவிக்குறுரே. (பார்)

4 ஆடுகள் மாடுகள் போலவல் லோவெம்மை
அடிமையென் றெண் ணுறுரே—இந்த
ஆசியாக் கண்டத்தில் பிறந்ததினுல் நம்மை
அலக்ஷியம் பண் ணுறுரே (பார்)

5 குறித்த விடத்திலன்றிக் குடித்தனம் செய்வதுங்
குற்ற மாகுமய்யே—அந்தக்
கொடிய ராஜாங்கத்தி லுரிமைகளென்பது
கொஞ்சமு மில்லையய்யே (பார்)

6 வாணிபஞ் செய்திட வேண்டிற் பதிவிடும்
வழக்கமொன் றுண்டைய்யே—அவர்
வருடத்தி லேமூன்று பவுன்வரி கட்டியே
வாழ்ந்திட வேண்டுமெய்யே. (பார்)

எ—வது அங்கம்.

1896 ஸூ-த்தில் மகாத்மா குடும்பத்துடன் திரும்பவும் தென்னுப்ரிகா வருகிறுர். தற்செயலாய் அவரது கப்பலில் சில இந்தியர் வந்தனர்.

இதைக்கண்ட வெள்ளையர் அநேக இந்தியரைத் தென்னுப்ரிகாவில் குடியேற்ற எற்பாடு செய்யப்பட்டிக்கிறதென்று ராய்ட்டர் தெரிவித்தது உறுதியென்றெண்ணி கப்பலிலுள்ளவர் கரை யேருமல் தடுக்கும்படி, ஜனங்களைத்தூண்டி மகாத்மாவைத் தூற்றுகின்றனர்.

'என்னடி நான் பெற்ற மங்கை' என்ற மேட்டு.

1 என்னடாவென்தம்பிமாரே அண்ணமாரே தங்கைமாரே-நமக்
கேளனம் வந்தது பாரே நம
தினமேவிய ஜனநாயக
மதிமேலவொரு தனிபாதக
இந்தியனும் வந்து சார்ந்தான் நம்மைச்
சந்தியில் வைக்கக்கை தேர்ந்தான் (என்னடா)

2 கற்றவ னுமொரு காந்தி என்னப்ராந்தி அவன் சாந்தி தனைக்
கண்டாலெடுக்குதே வாந்தி அந்தக்
கரியோனொரு நெறியோனென
அறியார்தரு வெறியாலவன்
கண்ணிழந்து வெளிப் பட்டான் எங்கும்
முன்னிருக்கத் தலைப் பட்டான். [என்னடா]

3 கூலிப்புழுக்களைத் தாங்கிப் பணம்வாங்கி மிகவேங்கி--யிவன்
கூக்குரல் போடுநு னேங்கி இந்தக்
கொலைபாதகன் நிலையாவையும்
வெளியாயின சிலநாள்முனர்
கொந்தளித் திந்திய தேசம் வந்த
தந்திகள் சந்ததம் பேசும். (என்னடா)

4 கொண்டுவர் தான்பெருங் கூட்டம் என்ன தேட்டம்
அவன் நாட்டங் கண்டு
கூலிப்பிடிப்பதோ வோட்டம் இந்தக்
கொடியோன் வெகு துணிவானவன்
குடியேறிடப் பல கோடிகள்
கொண்டு கொண்டுவந்து சேர்ப்பான் நம
தண்டையில் நின்றிடப் பார்ப்பான். (என்னடா)

தென்னாப்பிரிகா வெள்ளையர், மகாத்மா முதலானோருக்குக் கப்பலி னின்று இறங்காமல் இந்தியாவுக்குத் திரும்பிப்போகும்படி எழுதிய நிருபம்.

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்.

நாற்றுமுறு மிந்தியர்தம் கூட்டமு மிகுத்தலால்
நாணயமுங் கெட்டு மதனால்
நாகரீ கங்குறை வாகுமா லன்றியும்
நங்கள்கன வான்க ளெல்லாம்
கூற்றெனத் தங்களைக் கொடுமைபல செய்ததாய்க்
கூறினீர் தேச மெங்கும்
கொண்டுவந் தீர்பெருங் கூட்டமு மிங்ஙனே
குடியேற்ற நினைவு கொள்ளும்

தேற்றமு மறிந்கனம் திறந்துதிசழ் வீட்டினில்
செல்கின்ற நாய்க ளென்ன
சேர்ந்தநீ ரிவ்விடம் வாழ்வது மடாததால்
செய்புமுப கார மொன்றே
மாற்றிநுங் கப்பலை வந்தவழி பார்த்திடில்
வழிகூலி தருவ தென்றே
வைத்தவெங் கருணையை மதியாது மேவிடின்
மாளுவது திண்ண மிதுவே.

கப்பலிலுள்ளோரிடம் இதைப்பற்றி நன்கு யோசித்து மகாத்மா அனுப்பிய பதில்.

அறுசீர் கடில்நெடிலாசிரிய விருத்தம்.

வந்தநும் நிருபங் கண்டோம் மனமது துடிக்குதய்யோ!
நந்தம தறிவி லும்மை நாங்களோ நோத வில்லோம்
அந்தமு மாதியில்லா அரும்பெருஞ் சாக்ஷி நோக்கில்
எந்தம துயிர்போனலு மிறக்குதல் கடனு மய்யே!

மகாத்மா வந்த கப்பலும் மற்றொன்றும் துறைமுகத்துள் அநுமதிக்கப் படவில்லை. நாள் ஒன்றுக்கு 150 பவுன் அதாவது 2250 ரூ. நஷ்டத்தில் இருகப்பல்கள் 24 நாட்கள் வரை வெளியே நிறுத்தப்பட்டன. இப்படிச் செய்யும்படி சட்டமில்லை. கப்பல் தலைவர் இதைக்குறித்து அரசாங்கத்திற்கு எழுதி அனுமதி கிடைக்காவிடில் அனுமதியில்லாமலே பிரவேசிப்பதாக எழுதிவிட்டார்.

அநுமதி கிடைத்தது. ஆனல் பொது ஜனங்கள் கப்பலிலுள்ளவரை முக்கியமாக மகாத்மாவைத் தாக்கத் தீர்மானித்துக் கொண்டனர்.

மகாத்மாவை ஒரு ஐரோப்பிய நண்பர் இட்டுச்சென்ருர். அவரைப் பிரித்துவிட்டு மகாத்மாவை ஜனங்கள் தாக்குகிருர்கள்.

'சேரிமுற்றுஞ்சிவ பக்தி பண்ணும்படி விட்டயாம் அடியிட்டயாம்'
என்ற மெட்டு.

முதலாவது வெள்ளையர் மகாத்மாவை இடித்துக்கூறுகிருர்.

1 தேசமெங் கெங்குஞ்சென் றென்னென்ன வீண்பழி
கூறினய் எமைத் தூறினய் உனைச்
சித்ர வதை செய்திட் டாலு மெமக்கில்லை
தோஷமே அடே வேஷமே!

மற்றொருவர் மகாத்மாவின் நண்பரான வெள்ளையரைப்பிரித்து விடுகிறார்.

ஷை மெட்டு.

2 விட்டுப் பிரிந்துநீர் வேறிடஞ் செல்லுதல்
மேன்மையே ஜனப் பான்மையே இவனை
வீட்டிட வந்தநங் கூட்ட மிகுத்திங்கு
துள்ளுமே உமைத் தள்ளுமே.

நண்பரைப் பிரித்துவிட்டு மறுபடியும் மகாத்மாவை இடித்துக் கூறுகிறார்கள்

ஷை மெட்டு.

3 மூடப்புழுக்களை நாடிப் பகைதன்னை
மூட்டினாய் எரி யூட்டினாய் எங்கள்
முன்னாலும் வந்திட்டாய்! என்னடா நீயோராண்
பிள்ளையா? நிறம் வெள்ளையா?

வேறொரு வெள்ளையர் வாயால் பேசுவது பயனற்றதென்று மகாத்மாவை நன்கு புடைக்கும்படி ஏவுகிறார்.

'சேனைக்கதிபதி செங்கமலமவள்சேத்துமடிந்தனளா?' என்றமெட்டு.

1 என்னடாஎன்தம்பி யின்னம்வழக்கினிலின்னல்படுத்துகிறாய்? அவனை
யெட்டிப் பிடித்தொரு குத்துக்கொடுத்துயிர்
சுக்கக்கிடத்திடடா!

மற்றொருவன் மகாத்மா பிரஞ்ஞையற்றுப் போகும்படி அடித்துவிடுகிறான்.

177079

ஷை மெட்டு.

2 வாயாற் பிதற்றிடிற் வந்ததுமென்னடா? மான மழிந்ததடா!
வாங்கினா னென்னுதை வாயைப் பிளந்தவன் கௌவினான்
மண்ணையடா!

பிரஞ்ஞை யற்ற மகாத்மாவை மிஸஸ் அலக்ஸாண்டர் என்னும் சூப்ரிண்டெண்டின் மனைவி கூட்டத்தை விலக்கிக் காக்கிறாள்.

இங்கிலீஷ் நோட் நவரோஸ் இராகம்—ஆதி தாளம்.

1 அநீதமாக விங்ஙன மடிக்க லாகுமா? நல
ஆண்மையான வீரரே துடிக்க லாகுமா?
2 நீதி பங்கம் செய்தலேநல் நாக ரீகமா?
நேர்மை யாம் முறை யிருக்க நீச மாகுமா?
3 வலியிழந்த பகைவரேனும் மாட்டல் தீரமா? ஓர்
மனிதனோடு கூட்டம் நின்று வாட்டல் வீரமா?
4 எளிமையென்னைக்கொன்று பின்னர்பிவரைத் தள்ளுமே என்
இனிமை யான சோதரரே எட்டி நில்லுமே.

அ-வது அங்கம்.

தென்னுப்ரிகாவில் போயர் சண்டை 1899 ஞூ-த்தில் ஆரம்பித்து விட்டது. அரசாங்கத்தார் இந்தியருக்கு எவ்வளவோ தீங்குகள் செய்திருந்தாலும் மகாத்மா அவர்களுக்கு உதவி செய்து தங்கள் பெரிய குணத்தை வெளிப்படுத்த வேண்டுமென்ருர். ஆனால் வெள்ளையர் இவரைக்கேலி செய்தனர். 'இந்தியருக்குச்சண்டை யென்ருல் இன்னதென்று தெரியுமோ'! என்றனர். இருந்தாலும் பயங்கரமாக யுத்தம் நடக்கும் போது இவர்களது உதவி இன்றியமையாததாயிருந்தது.

அப்பொழுது மகாத்மா இந்தியரை உதவி செய்யும்படி வேண்டுகிருர்.

'தக்க பாராங்கல்லைத் தூக்கி' என்ற மெட்டு.

1 செத்த பிணங்களைத் தூக்கி—நம்மைச்
சேர்ந்தவர்க் கேஜய மாக்கி
ஒத்துப் பெரும்புகழ் தேக்கி—நாம்
ஓங்கி வளர்வம்மே ஞேக்கி (செத்)

2 கஷ்டப் படுத்தின பேரும்—நம்மைக்
கண்டா லவர்பண மீரும்
திட்டப் பொதுப்பகை தீரும்—படி
சேர்ந்து உழைத்திட வாரும் (செத்)

3 ஏளனம் செய்தபே ரேங்கி—நம்மை
ஏற்றப் பெரும்புகழ் வாங்கி
வாளமர் முற்றிலுந் தாங்கி—நாம்
வாழ்வம் பழிப்பிணி நீங்கி (செத்)

4 தாயுடை மானத்தைக் காரும்—நாம்
சப்பைகளென்கிற பேரும்
ஓயும்ப டிக்கினி நீரும்
ஒன்ருய் வெளிப்பட்டு வாரும் (செத்)

யுத்த காலத்தில் இந்தியர், முக்கியமாக மகாத்மா, செய்த ஊழியத்தை மெச்சி ஜெனரல் புல்லர் புகழ்வது.

நொண்டிச்சிந்து.

இந்திய மக்க ளென்ருல் நாங்கள்
ஏளனம் செய்துவெகு நாளிருந்தோம்
தந்திர மவர்க்குண்டு வெகு
சாகஸ முண்டுபடை வீரமுண்டு

அஞ்சா நெஞ்சு முண்டு எங்கள்
அணிகளில் நின்றுபணி புரிந்ததுண்டு
நெஞ்சினி லூக்க முண்டு கொடும்
நெருப்பிடையே குண்டு வெடிப்பிடையே

பாரார் பசிப்பிணி யும் காயம்
பட்டவரைத் தூக்கியவர் ஆதரிப்பார்
ஈரம் இரக்க முண்டு எங்கள்
இன்ப துன்பங் களையவர் சகித்ததுண்டு

ஊழியஞ் செய்வ திலே அவர்
உற்சாகம் காட்டிடுவர் உறுதியுண்டு
பாழியங் தோளிடையே படையில்
பட்டவரைத் தூக்கிவெகு பாடுபட்டார் (இங்)

கந்தியென் றொருசீ மான் இவர்
கண்ணிய வான்வெகு புண்ணியவான்
வந்தெழுந்த யிடையூறில் கொஞ்சம்
மயக்கமுறுர் என்றுந் தியக்கமுறுர்

வாடார் முகங்கோ ணுர் சுத்த
வாய்மை யுள்ளார் மிகத் தூய்மையுள்ளார்
நாடார் ஈனமதை வெகு
நாணய முள்ளதுரை மகனிவரே

அடக்கம் பொறை யுடையார் என்றும்
ஆடாத வலிமையும் அருளுடையார்
அடக்குந் திறனுடையார் எவர்க்கும்
அன்புடை யார்மனத் தென்புடையார்

ஓடி முதுகினிலும் சவத்தை
ஒடுக்கிடு வார்தன தக்குளிலும்
நாடி வழி நடப்பார் அங்கு
நாவுலர்ந்து துடித்திடும் மனிதரையே

கண்டால் அருகோடி தனது
கைதனிலே நீரெடுத்துப் பருக்கிடு வார்
தொண்டே யிவர் பெருமை அதனைச்
சொல்லுதற்கு நாவுளதோ எல்லையுளதோ?

இந்தியர் ஊழியத்தை மெச்சி
எழுந்தொரு கட்டிடமும் நிறைந்தது பார்
சுந்தா ஜோகா னீஸ் பர்க்கில்
தோன்றுது பாரின்றும் கான்றுது பார். (இங்)

௲-வது அங்கம்.

ஆபத்துக் காலத்தில் இவ்வாறு உதவி செய்திருந்தும் வெள்ளையர் நன்றி கெட்டவராயிருந்தனர். ஆங்கிலக் கொடியின் கீழ் இந்தியருக்கு துன்பம் அதிகமானது. ஆகையால் இந்தியர் மகாத்மாவை கண்டு முறையிடுகின்றனர்.

மருவே செறித்த குழலார் மயக்கின் மதனுகமத்தின்-விரகாலே
என்ற திருப்புகழ்ச் சந்தம்.

1 மதியே செறித்த வடிவே யுளத்தில்
மகிழ்வே நிறைத்த புகழாளா!
மலையே யெதிர்க்கி னதுவே பொடிப்ப
மனமே திறத்த குருநாதா!

2 அதிகாரவர்க்க மதுவே செலுத்து
மநியாய முட்கும் வகையாதோ?
அமர்நாள் தொடுத்து மிடியே தடித்த
லடியே முரைக்க வசமோதான்!

3 விதியே! தலைக்கு வரியாக முப்பொன்
விளைவான தென்று முளதாமோ?
விரலா லழுத்து குறியே பொறிக்க
வினையேது குற்ற மறியேமால்

4 பதிவோ டெமக்கு ளெழுவா ணிபத்தின்
பயனே துறக்கு நெறியாமால்
பதியே குறித்த முறையே தடுக்க
பரிவா யெமக்கு மருள்வாயே.

மகாத்மா இந்திய ஜனங்களுக்கு அஹிம்ஸையோடு கூடிய ஒத்துழையாமை தருமத்தை உபதேசிக்கிறார். சட்ட மறுப்புச்செய்ய வேண்டிய முறைகளையும், தான் துன்பம் அநுபவித்துப் பிறரை வசப்படுத்திக் கொடுமைகளை ஒழிக்கும் தத்துவங்களையும் விரித்துக் காட்டுகிறார்.

ஆனந்தக் களிப்பு.

எதிர்க்கத் 'துணிந்துகொண் டேனே'—நமக்
'கிருக்கும் குறை முழுதும் நிகழ்த்திக்கொண்டேனே'
(எதிர்க்க)

1 வலுவற்ற பேரென்று நம்மை—பல
வாதைப்படுத்திடும் சோதரர் தம்மை
கலகங்கொளாதொரு நன்மை—முறை
காட்டிநல் நீதியை நாட்டிட இம்மை. (எதிர்க்க)

2 செல்வமும் ஆள்பலங் கூட்டி—தம்மைச்
சேர்ந்தவர்க் கேபக்ஷ பாதங்க ளூட்டி
வெல்லுவோம் என்றுகை நீட்டி—வரும்
வெள்ளையர்க் கேநம தாண்மையைக்காட்டி (எதி)

3 சேனைகள் பீரங்கி குண்டு—மற்றும்
தீங்கிழைக் கும்பல ஆயுதங் கொண்டு
மானமழிக்குவ மென்று—நம்முன்
மார்புதட் டிவரும் வீரரை யின்று (எதிர்க்கத்)

4 அழியாத ஆத்தும சத்தி—தன்னால்
ஆள்லாம் ஈரேழு லோகமுஞ் சித்தி
பழிபாவம் தன்னையே நத்தி—இந்தப்
பாராளும் மூர்க்கமாம் புத்தியை யெத்தி (எதிர்)

5 பொறுமைக் குண்டோவெங்கு மீடு—நின்று
பொறுத்தாரை யொருத்தாருக் கேகடு காடு
வறுமைகண் டெள்ளிக்கூத் தாடு—அற்ப
மாணிடர் தங்களுக் கேவருங் கேடு (எதிர்க்கத்)

6 எத்தனை துன்பம்வந் தாலும்—பிறர்க்
கெத்தனை யுந்துன்ப மெண்ணலை யாலும்
சத்தியம் சாந்தம தாலும்—துயர்
சகித்துப் பெரும்பகை தகித்துமென் மேலும் (எ)

7 சத்திய மொன்றையே பேசும்—என்றும்
சாகத் துணிந்துந் தனிச்சிறை வாசம்
மெத்தப் புரிந்தும்நந் தேசம்—அதி
மேன்மை யெனுஞ்சொல்லே காணவுந் தேசம்.

8 கொடுமைகள் கொண்ட தோர் சட்டந்—தனை
கூசாமல் மீறவோ மதிலென்ன நட்டம்
அடிமைப் பிழைப்போநம் மிட்டம்—அவர்
அறியாமற் பலபல பிழைகள்செய் திட்டம் (எதி)

9 கொஞ்சமுங் கொடுமைசெய் யாதீர்—சில
கொடுமைகள் செய்துநீர் அழிவையெய் தாதீர்
அஞ்சுத லென்றுஞ்செய் யாதீர்—நல
அன்பை விடுத்துநீர் துன்பில்லை யாதீர் (எதிர்க்)

10 ஆனந்தம் ஆனந்தம் வாரும்—நாம்
அனைவரும் ஒன்றென்ப தறிவினில் தேறும்
மாவனந் தழைத்திடச் சேரும்—நம்
மாபெரும் புண்ணிய பூமியைக் காரும். (எதிர்)

௧௦—வது அங்கம்.

மகாத்மாவின் உபதேசப்படி சட்ட மறுப்பு செய்கிறார்கள். தடுக்கப்பட்ட பிரதேசத்தில் நுழைகிறார்கள்.

'சீர்சிறக்கு மேனி பசேல் பசேலென'

என்ற திருப்புகழ்ச் சந்தம்.

1 நீர்நெறிக்கு மீறிற் குபீர் குபீரென
சோரிகக்குமாறு படீர் படீரெனும்
நீள்வெடிக்குழாய்க ளிதோ! விதோ! வென—உலாநீவி

2 நேர் பிடித்த வாள்கள் பளீர் பளீரென
தீகொளப்ப தாகை விறீல் விறீலென
நீ சமர்த்த ஞேதி ருடா! வடா! வெனப்—பலபேச

3 பார் பொறுக்கு மோயி தயோ! அயோ! வென
ஆர் வமிக்கு ளோர்கள் பகிர் பகிரென
பா ரதத்து ளேப கவான் பவா னெனத்—துதிநீட

4 பா லருக்கு மோர்கை யரோ! வரோ! வுயர்
சிலமிக்க தேவி மஞேர் மஞேர் புறம்
பா சம்வைத்த பேர்கள் பினே! பினே! வர—எதிரேகி

5 தார் புவிக்கு ளாடு சிலோர் சிலோர் வெறி
யா வியற்று மாறு படும் படும் விதி
தா ஞெருக்கு மாறு மிதே! யிதே! யெனக்-களியோடு

6 தா மரைக்கும் மாசு படா படா முகம்
மாமறைக்கு மூல மிதோ! இதோ! உயர்
சா தனக்கு மேலு ளதோ? வெதோ? வெனப்-புகழாட

7 வார் கடற்கு ணீடு புவீ புவீ தனில்
மாசகற்ற வாடி கிடீர் கிடீ ரென
வா னமர்க்கு ளீடு படீர் படீரெனப்—பிறகோதான்

8 மார் பிரித்து மாவி தரும் தரும் வகை
யா லகற்று மாறு கொளும் கொளுமென
வா னடத்தை நீட வரும் வரு மருட்—குருநாதா.

சட்ட மறுப்புக் காலத்தில் உயிருக்குத் துணிந்து மகாத்மாவின் ஆணைப்படி ஜனங்கள் செய்த தியாகமும் காட்டிய வீரமும் எல்லையற்றது. சிறைச்சென்ற இந்தியர் பலருடைய தலை சடைப்பிடித்திருந்ததை மகாத்மாவே கத்தரித்தார். பலருடைய மலத்தினைத் தன்கரத்தால் வாரினர்.

'பூமிமேச்சிடுமேண்ணுமலேக்கோர்துணேயானவன்'
என்ற சிந்து மெட்டு.

1 சட்டமறுப்புசெய்திட்டபேர்பட்டதைச் சாற்றுவேன்
துயர் ஆற்றுவேன் பதம் போற்றுவேன்—அங்கு
சாகத்துணிந்தவர் நாகரீகச்செய லேற்றுவேன்
மலர் தூற்றுவேன்

2 கட்டுக்கடங்கிநல் விட்டமுடன்றுயர் கொண்டனர்
புடைப் புண்டனர் வசை கண்டனர்—உயர்
காந்தியுடன்பல மாந்தருமேசிறை சென்றனர்
நெறி நின்றனர்

3 காணக்கிடையாத நாணம் படைத்திட்ட தேகமே
நல்வி வேகமே யிட்ட போகமே—கொண்ட
காதலரிழந்த மாதர்களேசெய்த த்யாகமே அநேகமே

4 வாணிபர் செய்தொழில் பேணுதல்விட்டுப கார்மே
செயுந் தீரமே ஆரவாரமே—கொளும்
வாகைபுனைந்திடச் சோகமடைந்திடு வீரமே
அபாரமே

5 ஆயுதங்கொண்டில காளும கந்தையில் நின்றவர்
புவி வென்றவர் எங்குஞ் சென்றவர்
ஆங்கில ரோடங்கு நீங்கரும் டச்சினர் என்றவர்
வினே தின்றவர்

6 நேயங்கொ ளாத்மவு பாயத்தினுற்செய்போ ராட்டமே
நிறை கூட்டமே கண்டு வாட்டமே—கொண்டு
நீதி தவறிய வ்ரதைபல செய்த தேட்டமே
எதேட்டமே

7 நாயனு காப்புகழ் தோமறக் காந்தியும் நாட்டினுர்
பகை வீட்டினுர் ஜெயங் காட்டினுர்—சொந்த
நாட்டினர் செஞ்சடைக் காட்டினேக் கத்தரித்தோட்டினுர்
அருளீட்டினுர்

8 தாமம லர்க்காத் தாலே மலத்தினே வாரினுர்
இதங் கூறினுர் கலங் கோரினுர்—அந்த
சாதும கத்துவின் பாதம் 'பணிந்திடு சீரினுர்
பதமேறினுர்

கக-வது அங்கம்.

சட்ட மறுப்புக்குப் பிறகு உலகம் மகாத்மாவுக்குச் சாதகமாகத் திருப்பியது. அதிகாரிகள் பணிந்து வந்தனர் ராஜி ஏற்பட்டது. கோபாலகிருஷ்ண கோகலே என்பவர் விஜயம் செய்தார். இந்தியருக்குள்ள இடையூறுகள் நீக்கப்படுமென்று வாக்களிக்கப்பட்டது. ஆனால் சிறிது காலத்தில் எல்லாம் மாறின. பழைய அக்கிரமங்களே மலிந்தன. அவ்வமயம் இந்தியர் யோசித்து மறுபடியும் சட்ட மறுப்பைக்கொள்கின்றனர்.

'இலவு காத்த கிள்ளை யாச்சே-நாம்
எடுத்துச்சொன்னதெல்லாம் போச்சே' என்ற மெட்டு

1 வாக்கு மீறிடலு மாச்சே—நாம்
வாதைப் படுவதேமே லாச்சே!

2 வெள்ளை வாதம்மே லாச்சே—நாம்
விழலுக் கிறைத்ததாய்ப் போச்சே!

3 பட்ட தெல்லாம்வீ ணாச்சே—பழம்
பாடம் படித்திடவு மாச்சே

4 குடும்ப மிழந்திடவு மாச்சே—நம்
குறைகள் வளர்ந்துமே லாச்சே.

சட்ட மறுப்பில் ஸ்திரிகள் கலந்து கொண்டனர். ஏனென்றால் சியர்ல் என்பவரின் தீர்ப்புப்படி ஹிந்து முகமதிய விவாகங்கள் செல்லத் தக்கதாயில்லை. ஆகையால் அநேக குடும்ப ஸ்திரீகள் தங்கள் நாயகரை இழக்கும்படி யிருந்தது.

தவிர கூலியாளரும் அதில் தாராளமாய்க் கலந்து கொண்டனர். ஏனென்றால் ஒப்பந்தம் முடிந்தபின் அவர்கள் அங்கு வசிப்பதாயிருந்தால் குழந்தைகள் ஸ்திரீகள் உள்பட தலைக்கு மூன்று பவுன்ஒருவ ருஷத்திற்கு வரிசெலுத்த வேண்டியிருந்தது. இந்த வரி தங்கள் பிற்கால வாழ்வைப் பாதிக்கு மென்று உணர்ந்து அவர்களும் கலந்து கொண்டனர்.

சிறைப்பட்ட ஸ்திரிகளில் வள்ளியம்மை சரித்திரம் அதிமேன்மையானது அப்பெண் தென்னிந்தியாவைச்சேர்ந்தவள், அந்த மாது சிறையிலேயே மகாத்மாவின் ஆணை வழி நின்று உயிர் துறந்தனர்.

'திருவுற்றிலகு கங்கை' என்ற சிந்து மெட்டு.

1 கலகத் துலவு செங்கை விலகப் புலமை தங்கு
கருணைத் திரளை யுந்து வாயனே பாரம்
பொருளைப் பரவ மூந்து தூயனே உயிர்
காதலாகிய மாதரார்கள் தம் வாதை மாறியே போதமேவிநற்
கதியைப் பெறவுவந்த தாயனைத் தினம்
மதியிற் புனைவமந்த நேயனை

2 தெருவிற் புகுதவென்று முறையிற் புகலவன்று
திருவிற் பொலியுமிந்து தேவியர் சனம்
மருவிப் புரியுமந்த சேவையர் கொடுந்
தீபாதக காரரால்சிறை மேய மாதரில் நேயமாருயிர்
சிதையத் தவங்கிடந்த வள்ளியே என்றே
திகழத் திரிவரெங்குந் துள்ளியே

3 கொடுமைத் திலக முப்பொன் வரியைத் தளவு மற்றும்
குறையைக் களைய நின்ற வாதினில் உயர்
நெறியைத் தழுவு கின்ற போதினில் அங்கு
கூலியாளர்தம் வேலைநீவியே ஏலுமாசிறைச்சாலைமேவியே
குலவித் துணைபுரிந்த நேர்மையே பெரும்
புலவர் புகழுமந்த சீர்மையே

4 அடிமைக் குழிகிடந்து மிடியைப் பருகிவந்த
அருமைப் புதல்வரிந்து தேசரை தம்
பெருமைக் கரைகொணர்ந்த நேசரை நம்
ஆசைமோகன தாசராகிய ஈசனுர்பதம் பேசியேயினி
அடிமைப் படுவமந்த சாந்தியே நம்
நடையிற் பரவ வந்த காந்தியே.

கஉ—வது அங்கம்.

சட்ட மறுப்புத்தீர்ந்தது. சமாதானம் உண்டாயிற்று. சாந்தமே வென்றது. உடன் படிக்கை செய்து கொள்கின்றனர்.

இந்தியருடைய நிபந்தனைகள்.

'செந்தாழம்பூவுந்தேனுங்கமழ்' என்ற மெட்டு.

1 உத்தே சித்தோ மித்தே சத்தே
உறைவ தெங்கள துரிமையே
உங்க ளிதப்படியே யெங்கள் மதப்படியே
உழைக்க வெங்களை அழைக்க வந்தனம்
துனைக்கு முங்களி லிளைத்து நொந்தனம். (உத்)

அப்படியே ஒப்புக்கொண்டு தென்னுப்பிரிகா வெள்ளையர் இந்தியரோடு சமாதானம் செய்கின்றனர்.

ஷை மெட்டு.

1 தந்தோ மிந்தா சந்தே சுந்தான்
தரிப்ப துந்தம தாண்மை யே
சாதி மதப்படியே பேத முறைப்படியே
தழைத்த நிந்தனை ஒழிக்க நின்றனம்
பிழைக்க வந்தநும் வழக்க மெங்ஙனம்

2 உண்டோ கொண்டோர் பெண்டோ டிங்கே
ஊழியம் பெற வாணிபம்
ஒப்பந்தம் நீங்கிமுப்பொ னிப்பந்தம் தாங்குவதை
உடைத்துச் சிந்தனை துடைத்து வந்தனை
படைத்து முங்களை நடத்து கின்றனம்.

இந்தியர் தம் வெற்றியில் சந்தோஷங்கொண்டு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு மகாத்மாவைப் போற்றுகின்றனர்.

ஷி மேட்டு

3 சந்தோ ஷந்தான் வந்தோ மிந்தோ
தாரு மங்ஙனம் வீரரே
சாந்த முறைப்படியே காந்தி யுரைப்படியே
தருக்கு நிந்தனை நொறுக்கி வென்றனம்
பொறுக்கு மன்னவர் திருப்ப தந்துணை.

இவ்வாறு சாந்தப் போராட்டத்தில் வாகை சூடிய மகாத்மா தெக்ஷிணாயனத்தில் தென் துருவத்தைப் பிரகாசிக்கச் செய்த சூரியன் உத்தராயணத்தில் வடக்கே சாய்வதுபோல் இந்து தேசத்திற்குத் திரும்பினார்.

இந்தியாவில் அவரது போராட்டங்களையும் ஒத்துழையா முறைகளையும் அடுத்த பாகம் விளக்கும்.

முதற்பாகம் முற்றிற்று.

"கற்பின் வெற்றி"

'வாதை மிகுந்த தாதை சொற்கொண்ட வளரிளங்கொங்கை மின்னாள். "அறத்தினை யோம்பி இந்த அகிலமும் புரக்கும் ஐயே! என் மென்மொழித்தோழியால் இளவரசரின் வீர தீர பராக்ரமச்செய்கைகேட்ட அந்நாளே அன்னாரை அகத்திடை வரித்துளேன்.

மீண்டு இக்கால் அவரொழித்து மற்றவரை எண்ணல் முறையோ? மாண்புகழோ? மறுமை நெறியோ? மரபுக்கழகோ?

பசு பக்ஷிகளும் துணையென ஒன்றையே பற்றி பிரிந்திடில் உயிர் துறக்கும் இயற்கைய வாயிருக்க பகுத்தறிவுற்ற மானிடத்துதித்து, நன்மரபுதித்து, நன் மனையுதித்து, நன்மதியுதித்த நான், வரித்த கொழுநனை விடுத்து, எங்ஙனம் மற்றோனை அடுத்து, மானங்கெடுதது, 'என் குணத்தையுங் குலத்தையும் இழிவு படுத்துவேன்?"

என்று போராடி எமனுடன் வாதாடி கற்பின் வெற்றியை நாட்டிய மகா பதிவிரதையாகிய 'சாவித்திரி' சரித்திரம் உங்களுக்கு மிகவும் அவசியமானது. அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றது. பண்டிதர்களால் புகழப்பெற்றது. இதன் ஆசிரியரால் எழுதப்பெற்றது.

விலை அணா ஆறு.